ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

குறள் முழக்கம்



# வள்ளுவர் குறளை வையகமெங்கும் பரப்பும் அமெரிக்கத் தமிழர்,

## முனைவர் இர. பிரபாகரன்

முனைவர் பிரபாகரன் தமிழ் நாட்டில் மன்னார்குடியில் பிறந்தவர். இவர் தமிழ் நாட்டில் கணிதத்துறையில் இளம் அறிவியல் (B.Sc;) முதுநிலை அறிவியல் (M.Sc) ஆகிய பட்டங்கள் பெற்றார். சில ஆண்டுகள், தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகளில் விரிவுரையாளராகப் பணியாற்றியபின், இவர் அமெரிக்காவில் கணினித்துறையில் எம்.எசு. (M.S.) பி.எச்.டி. (Ph.D.) மற்றும் எம்.பி.ஏ. ( M.B.A) பட்டமும் பெற்றார். இவர் அமெரிக்காவில் தனியார் நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களின் மூலம், நாசா (N.A.S.A,) அமெரிக்கப் படை (U.S Army) ஆகிய நிறுவனங்களிலும் உயர்ந்த பதவிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.



முனைவர் பிரபாகரன் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழரின் நலம் ஆகியவற்றில் மிகவும் ஈடுபாடு உடையவர்; திருக்குறள் மற்றும் சங்க இலக்கிய நூல்களை மேலை நாடுகளில் பரப்புவதைத் தன் முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டவர் இவர் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின்

தலைவராகவும், தமிழ்நாடு அறுக்கட்டளையின் செயலராகவும், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் துணைத்தலைவராகவும் பணிபுரிந்து, அமெரிக்காவில் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் தொண்டாற்றியவர்.

வாசிங்டன் வட்டாரத்தில் 2003–ஆம் ஆண்டு, **‘தமிழ் இலக்கிய ஆய்வுக்கூட்டம்’** என்ற அமைப்பை நிறுவி, அதன் சார்பாகக் கடந்த பல ஆண்டுகளாகத் திருக்குறள், புறநானூறு, தமிழ் இலக்கிய வரலாறு, சிலப்பதிகாரம், குறுந்தொகை, நாலடியார், முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய நூல்களைத் தானும் கற்று, நண்பர்களுக்கும் அவற்றைக் கற்பித்தார். இவர் தொடங்கிய அந்த அமைப்பு, அமெரிக்காவில், பல ஊர்களில், தமிழர்கள் கூடித் திருக்குறள் மற்றும் சங்க இலக்கியம் ஆகியவற்றைப் படிப்பதற்கு முன்மாதிரியாக இருந்துவருகிறது.

மேலைநாடுகளில் முதன்முறையாக நடத்தப்பட்ட பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு, உலகின் முதல் பன்னாட்டுப் புறநானூறு மாநாடு, உலகின் முதல் பன்னாட்டுக் குறுந்தொகை மாநாடு ஆகிய மாநாடுகளுக்கு ஒருங்கிணைப்பாளராகப் பொறுப்பேற்று, அவற்றை மிகவும் வெற்றிகரமாக முனைவர் பிரபாகரன் நடத்தியுள்ளார். இவர் 2005 – ஆம் ஆண்டு, அமெரிக்காவில், பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு நடந்தபொழுது, அங்கு திருவள்ளுவர் சிலையை நிறுவினார். 2010– ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் கலந்துகொண்டு, “வள்ளுவர் பார்வையில் புறநானூற்று இறைமாட்சி” என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வழங்கினார். இவர் புறநானூறு, குறுந்தொகை ஆகிய சங்க இலக்கியங்களுக்குத் தன்னுடைய எளிய விளக்கவுரைகளை வலைத்தளத்தில் பதிவு செயதது மட்டுமல்லாமல், அவற்றை மூன்று நூல்களாகவும் (**புறநானூறு – மூலமும் எளிய உரையும், பகுதி 1, (புறநானூறு – மூலமும் எளிய உரையும், பகுதி 2, குறுந்தொகை)** வெளியிட்டிருக்கிறார். இவர் 2019 – ஆம் ஆண்டு, *The Ageless Wisdom (As embodied in Thirukkural)* என்று ஆங்கிலத்தில், திருக்குறளைப் பற்றி

ஒரு விரிவான நூல் வெளியிட்டுள்ளார். சங்க இலக்கியம் மற்றும் திருக்குறள் சார்ந்த தலைப்புகளில் பல கருத்தரங்கங்களை முனைவர் பிரபாகரன் நடத்தியுள்ளார். அமெரிக்காவிலும் இந்தியாவிலும் பல ஊர்களுக்குச் சென்று புறநானூறு மற்றும் திருக்குறள் சார்ந்த தலைப்புகளில் சொற்பொழிவாற்றியுள்ளார்.

கடந்த ஓராண்டு காலமாக, அமெரிக்கத் தமிழ் வானொலியில் "**திருக்குறள் சிந்தனைகள்**" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிவருகிறார். இவர் தன்னுடைய வலைத்தளத்தில் திருக்குறள் சார்ந்த கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். அந்தக் கட்டுரைகள் இப்பொழுது "**புதிய பார்வையில் திருக்குறள்**" என்ற நூல் வடிவத்தில் வெளிவர உள்ளன.

இப்பொழுது, அமெரிக்காவில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான திருக்குறள் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

**இணையம்,வானொலி,தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் வள்ளுவர் குறளை வையகமெங்கும் பரப்பும் பணியில் முனைந்து உழைத்துவரும் அமெரிக்கத் தமிழர் முனைவர் இர. பிரபாகரன் அவர்களுக்கு நம் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்போம்.அவரைப் போலவே அனைவரும் குறள்நெறி பரப்ப முனைந்தால் உலகெங்கும் மனிதநேயம் தழைத்தோங்கும்;போரும் பூசலும் மறையும் என்பதில் ஐயமில்லை.**

# குறளரசன் செந்தில் துரைசாமி

# அவர்களோடு ஒரு நேர்காணல்

**கேள்வி:** செந்தில் செல்வன் துரைசாமி அவர்களே! வணக்கம். தமிழ் நாட்டிலிருந்து, ***உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம்*** என்ற அமைப்பு திங்கள்தோறும் "***குறள் முழக்கம்***" என்ற மின்மடலை வெளியிடுகிறது. அந்த மின்மடலில் திருக்குறளில் சாதனை புரிந்தவர்களைப் பற்றிய செய்திகளை வெளியிட விரும்புகிறோம். அமெரிக்காவில் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து சாதனை புரிந்தவர்களில் நீங்களும் ஒருவர் என்று கேள்விப்பட்டேன். உங்கள் சாதனைகளைப் பற்றி உங்களிடம் ஒரு சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.



**செந்தில் செல்வன்:** வணக்கம்! முதலில் தங்களுக்கும் வள்ளுவர் தந்த வாழ்வியல் அறநூலான திருக்குறளை வையகமெங்கும் பரப்பும் நோக்குடன் தொடங்கபட்டுள்ள உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் அமைப்பிற்கும் வாழ்த்துகள்! உலகத்தினர் அனைவருக்கும் பொதுவான திருக்குறளின் கருத்துகளை உலக மக்கள் அனைவரும் ஒருங்கிணையும் இவ்விணையவழியேக் கொண்டு சேர்ப்பது பொருத்தமானதாக உள்ளது. இம்முயற்சிக்குப் பாராட்டுகள்.

**கேள்வி:** நீங்கள் எப்பொழுது திருக்குறளைப் படிக்கத் தொடங்கினீர்கள்?

**செந்தில் செல்வன்:** தமிழ்நாட்டில் கல்வி பயின்ற பெரும்பாலான மாணவர்களைப் போலதான் நானும் சிறுவயதில் பள்ளியிலும் பின்னர் பேருந்துகளிலும்தான் திருக்குறள் படித்தேன். அவை பெரும்பாலும் தேர்வுக்காக மனனம் செய்யப்பட்டவையே. பிறகு நூல்களிலும் அறிஞர்களின் மேடைப் பேச்சிலும் அவர்கள் திருக்குறளை மேற்கோள் காட்டும் பொழுது ஒரு சிலவற்றைப் பொருளுணர்ந்து அறிந்து கொண்டேன்.

அமெரிக்காவிற்கு வந்தபிறகு, என் குழந்தைகள் *நித்திலன்* மற்றும் *இனியா* தமிழ் கற்கத் தொடங்கிய பொழுது, டெக்சசு மாகாணம், டாலசில் உள்ள சாசுதா

தமிழ் அறக்கட்டளை நடத்திய திருக்குறள் போட்டிகளில் கலந்து கொண்டனர். பிறகு பெரியவர்களும் திருக்குறளை ஓதலாம் என்ற வாய்ப்பு இருப்பதை அறிந்து கொண்டு, 2014-ஆம் ஆண்டு நடந்த நிகழ்வில் நானும் அப்போட்டியில் கலந்து கொண்டேன். எனக்கு ஏற்கனவே தெரிந்த சில குறள்கள் மற்றும் ஒவ்வொரு அதிகாரத்தில் இருந்தும் குறைந்தது ஒரு குறள் என்று தேர்ந்தெடுத்து 150 திருக்குறள்களை ஓதியதற்கு சிறப்புப் பரிசு கிடைத்தது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் என் குழந்தைகள் போட்டிகளில் பங்கு பெறும் பொழுது நானும் ஒரு தன்னார்வலராகவும் நடுவராகவும் பங்கேற்று வந்தேன். 2017-இல் நடைபெற்ற திருக்குறள் போட்டிகளுக்குப் பிறகு, திருக்குறளை முழுமையாகக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

**கேள்வி:** உங்களுக்குத் திருக்குறளில் ஆர்வத்தை உண்டாக்கியவர் யார்?

**செந்தில் செல்வன்:** எனது திருக்குறள் மற்றும் தமிழார்வத்திற்குக் காரணமானவர் என் தந்தை காலம்சென்ற புலவர் திரு. வெ.இரா.துரைசாமி அவர்கள். அவர் தமிழாசிரியராகப் பணியாற்றியது மட்டுமல்லாமல் தன்னுடைய சுய முயற்சியில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள பல கல்வெட்டுகள், ஓலைசுவடிகள், செப்பேடுகள் ஆகியவற்றை படித்து, ஆய்வு செய்து பல அரிய வரலாற்றுச் செய்திகளை வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

நான் திருக்குறளை முழுமையாகக் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தை என் தந்தையிடம் தெரிவித்தவுடன், அவர் தம் மாணவப் பருவத்தில் திருப்பனந்தாள் காசி மடத்தில் புலவர் பயிற்சி பெற்ற பொழது படித்த திருக்குறள் உரைக்கொத்து நூல் தொகுதியை எனக்குப் பரிசளித்து திருக்குறளைப் படிக்க என்னை மிகவும் ஊக்குவித்தார். வாழ்வின் எல்லா சூழல்களுக்கும் பொருத்தமாக ஏதாவது ஒரு குறள் இருக்கும் என்று கூறுவார். என் தாயார் திருமதி. பொன்னம்மாள் தமிழாசிரியையாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவரும் என் திருக்குறள் ஆர்வத்திற்குத் தூண்டுகோலாக இருந்தார்.

**கேள்வி:** 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்வதற்கு எவ்வளவு காலம் ஆகியது? அவற்றை எப்படிப் படித்தீர்கள்?

**செந்தில் செல்வன்:** அனைத்து குறட்பாக்களையும் வரிசையாகப் படித்து மனனம் செய்ய சுமார் 11 மாத காலம் ஆகியது. அலுவலக வேலை மற்றும் குடும்பப் பொறுப்புகளுக்கு இடையே கிடைத்த நேரத்தில் ஒரு நாளில் 5 குறள்கள் அல்லது ஒரு வாரத்தில் மூன்று அதிகாரங்களாவது கற்க வேண்டும் என்று

திட்டமிட்டுப் பயின்றேன். ஒவ்வொரு அதிகாரமும் கற்றவுடன், அதிலுள்ள குறள்களை பொருளுடன் எழுதிப் பார்த்ததுடன் ஏற்கனவே பயின்ற அதிகாரங்களுடன் சேர்த்துச் சொல்லவும் பயிற்சி செய்தேன்.

என் மனைவி திருமதி. தேன்மொழி மற்றும் இரு குழந்தைகளிடமும் நான் கற்றவற்றை ஓதி அவர்களை சரிபார்க்கச் சொல்வேன். அவர்கள் எனது முயற்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து ஊக்குவித்தது மட்டுமல்லாமல் அனைவரும் என்னுடன் திருக்குறள் போட்டியில் பங்கேற்றனர்.

**கேள்வி:** நீங்கள் "**குறளரசன்**" என்ற பட்டம் பெற்றதாகக் கேள்விப்பட்டேன். இந்தப் பட்டம் உங்களுக்கு யார் அளித்தது? எப்பொழுது அளிக்கப்பட்டது?

**செந்தில் செல்வன்:** 2018-இல் டாலஸில் உள்ள சாஸ்தா தமிழ் அறக்கட்டளை நடத்திய 11-ஆம் ஆண்டு திருக்குறள் போட்டியில் நான் 1330 குறள்களையும் ஓதியதைப் பாராட்டி சாஸ்தா தமிழ் அறக்கட்டளை எனக்கு இப்பட்டத்தை அளித்தனர்.

மேலும் நான் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றும் கோப்பல் தமிழ்க்கல்வி மையம், பாலதத்தா தமிழ்ப்பள்ளி, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, மற்றும் ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ப் பள்ளி ஆகிய அமைப்புகள் நான் 1330 குறள்களையும் ஓதியதைப் பாராட்டி கௌரவித்தனர்.

**கேள்வி:** எல்லாக் குறளுக்கும் உங்களுக்குப் பொருளும் தெரியும் அல்லவா?

**செந்தில் செல்வன்:** ஆம், திருக்குறளைப் பொருளுடன் வெவ்வேறு உரைகளையும் ஒப்புநோக்கிப் பயின்றேன். என் தந்தை எனக்களித்த நூலுடன், திருக்குறள் செயலி, மற்றும் http://www.thirukkural.com இணையதளம் ஆகியவையும் பயனுள்ளதாக இருந்தன. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின்னூலகமும் (http://www.tamilvu.org/ta/library-l2100-html-l2100ind-128184) ஒரு சிறந்த அறிவுப் பெட்டகமாக விளங்குகிறது.

அனைவரும், முக்கியமாக பெரியவர்கள் திருக்குறளைப் பொருள் தெரிந்து பயின்றால்தான் அதன் கருத்துகளை முழுமையாக உணர்ந்து உள்வாங்கிக்கொள்ள முடியும் என்பது என் கருத்து. திருக்குறளின் சிறப்பு, அதன் பொதுத்தன்மை மற்றும் எளிமை. உலகின் அரிய தத்துவங்கள் புரிந்து கொள்ளக் கடினமானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. எளிய சொற்களில், சுருக்கமாகவும், அனைவருக்கும் புரியும் உவமையுடன், எக்காலத்திற்கும்,

யார்க்கும் பொருந்தக் கூடிய வகையில் இருப்பதால்தான் திருக்குறள் இன்றளவும் அனைவராலும் போற்றப்படுகிறது.

**கேள்வி:** திருக்குறள், தமிழ் தொடர்பாக நீங்கள் வேறு என்ன பணிகள் செய்து வருகிறீர்கள்?

**செந்தில் செல்வன்:** வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் குறள்தேனீ மற்றும் திருக்குறள் தொடர்பான குழுக்களிலும், திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்கள் தொகுக்கும் திட்டத்திலும் தன்னார்வலராக இணைந்து திருக்குறளை குழந்தைகள், மற்றும் உலக மக்கள் அனைவருக்கும் கொண்டு சேர்க்க என்னாலான சிறு பங்களிப்பைச் செய்து வருகிறேன்.

அதுமட்டுமல்லாது, அமெரிக்கவாழ் அடுத்தத் தலைமுறை குழந்தைகளுக்குத் தமிழைக் கற்பிக்கும் நோக்குடன் டாலஸில் உள்ள கோப்பல் தமிழ்க்கல்வி மையத்தில் கடந்த 6 ஆண்டுகளாக தன்னார்வ ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். பாடங்களை கற்பிப்பது தவிர, மேடை நாடகங்கள் எழுதி மாணவர்களை அதில் பங்குபெறச் செய்து தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் இலக்கியங்களை கற்றுக்கொள்ள ஊக்கமளிக்கிறேன். எங்கள் பள்ளி அளவில் மாணவர்களுக்கு தமிழ்த்தேனீ போட்டிகள் நடத்தி அவர்களை தேசிய அளவில் நடைபெறும் பேரவையின் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்து வருகிறேன். எனது தமிழ் ஆசிரியப் பணியைப் பாராட்டி அண்மையில் அமெரிக்கத் தமிழ்க்கல்வி கழகம் நல்லாசிரியர் விருது அளித்து கௌரவித்தது.

**கேள்வி:** தமிழில் வேறு சாதனைகள் புரியும் திட்டம் உள்ளதா?

**செந்தில் செல்வன்:** திருக்குறளைப் போல மற்ற பழந்தமிழ் இலக்கியங்கள் மற்றும் தொல்காப்பியத்தையும் கற்க வேண்டும் என்ற ஆவல் உள்ளது. அது தவிர, என் தந்தையின் கவிதை மற்றும் தொல்லியல், வரலாற்றுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட வேண்டும் என்ற எண்ணமும் உள்ளது. அதற்கான முயற்சியாக தொடர்ந்து அவரது படைப்புகளை இணையத்தில் https://kollikilan.blogspot.com என்ற வலைத்தளத்தில் பதிவிட்டு வருகிறேன்.

**கேள்வி:** உங்களைப்போல் திருக்குறள் கற்க வேண்டும் யாராவது முயற்சி செய்திருக்கிறார்களா? நீங்கள் மற்றவர்களை ஊக்குவித்திருக்கிறீர்களா?

**செந்தில் செல்வன்:** வட அமெரிக்காவில் எனக்குத் தெரிந்து 8 பேர் திருக்குறளை முழுமையாக ஓதி இருக்கிறார்கள். அவர்களில் இருவர் பள்ளி மாணவிகள் என்பது கூடுதல் சிறப்பு. என்னுடைய மாணவர்களுக்கு திருக்குறளைக் கற்பித்து அவர்களை மேலும் படிக்க ஊக்குவித்து வருகிறேன். ஒவ்வொரு ஆண்டும் திருக்குறள் போட்டிகளில் நடுவராக பங்கேற்கும் பொழுதும், நிறைய தமிழ்க் குழந்தைகள் ஆர்வத்துடன் அதிக எண்ணிக்கையில் திருக்குறளை ஒப்புவிப்பதைக் காணும்பொழுது மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆண்டு வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் குறள்தேனீ நிகழ்வில் குழந்தைகளை நூறாயிரம் முறை திருக்குறளை ஓதச் செய்ய வேண்டும் என்ற முயற்சியில் தற்போது ஈடுபட்டிருக்கிறோம். அதற்கான தன்னார்வலர் குழுவில் முனைப்புடன் பங்கேற்று குழந்தைகளையும் பெற்றோர்களையும் ஊக்குவித்து வருகிறேன்.

**கேள்வி:** உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் மூன்று குறட்பாக்களைக் கூறுங்கள்.

**செந்தில் செல்வன்**: முப்பாலான திருக்குறளின் ஒவ்வொரு பாலிலிருந்தும் ஒரு திருக்குறளை இங்கு கூறுகிறேன்.

குறள் 33: ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

குறள் 666: எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

குறள் 1122: உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

நன்றி. உங்கள் அரிய சாதனைகளுக்காக உங்களுக்கு எங்கள் வாழ்த்துகள்!

**செந்தில் செல்வன்:** மிக்க நன்றி ஐயா, வாய்ப்பளித்த தங்களுக்கும் உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகத்திற்கும் என் மனமார்ந்த நன்றி! வணக்கம்!

இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு விற்பனைக்கு அல்ல.